ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

வர்த்தக அமைச்சு

# முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP)

## இலத்திரனியல் மற்றும் மின் துறைக்கான ஒரு தனித்துவமான தளமாக இலங்கையை நிலைநிறுத்துவதற்கு டிஜிட்டல் சந்தைப்படுத்தல் உள்ளடக்கத்தை மேம்படுத்த டிஜிட்டல் நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல்

இலத்திரனியல் மற்றும் மின் துறைக்கான ஒரு தனித்துவமான தளமாக இலங்கையை நிலைநிறுத்துவதற்கு டிஜிட்டல் சந்தைப்படுத்தல் உள்ளடக்கத்தை மேம்படுத்த தகுதியுடைய டிஜிட்டல் நிறுவனம் ஒன்றிடம் இருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் (EDB) முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

தேசிய பெறுகை நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்ட ஆலோசகர்களின் தேர்வு மற்றும் பணியமர்த்தல் வழிகாட்டல்களில் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய டிஜிட்டல் நிறுவனம் தேர்வு செய்யப்படும்.

### பணிப் பரப்பு

குறிப்பு விதிமுறையில் (TOR) திட்டத்துடன் தொடர்புடைய பணிப் பரப்பு விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

### விண்ணப்பிக்கும் நடைமுறை

தலைவர், திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு (CPCD), இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, NDB-EDB கோபுரம், 42, நவம் மாவத்தை, கொழும்பு -02 என்ற முகவரிக்கு முன்மொழிவுக்கான கோரிக்கையை (RFP) சமர்ப்பிப்பதற்கு டிஜிட்டல் நிறுவனங்கள் கோரப்படுவதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘RFP – ஒப்பந்த இலக்கம் மற்றும் விபரத்தை தெளிவாகக் குறிப்பிட்டு 2021 ஆகஸ்ட் 9ஆம் அன்று பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அல்லது பெறுகை பிரிவில் (கீழுள்ள முகவரியின் EDB அலுவலகத்தின் 06 ஆம் கட்டம்) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். இரு பிரதிகளான வெவ்வேறு விரிவான முத்திரையிடப்பட்ட தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவை சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரர்கள் கோரப்படுகின்றனர்.

நாட்டில் நிலவும் கொவிட் வைரஸ் தொற்று சூழல் காரணமாக RFP ஆவணத்தை ஒன்லைனில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி ‘‘அறிவித்தலின்’’ கீழ் **www.srilankabusiness.com** என்ற EDB இணையதளத்தில் இருந்து மாதிரி RFP ஆவணத்தை தரவிறக்கம் செய்ய முடியும். இணையதளத்தில் இருந்து RFP ஆவணத்தை பெறும் நிறுவனங்கள், இலங்கை வங்கி, லேக் வியுவ் கிளையில் 306605 என்ற கணக்கு இலக்கத்தில், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு 1000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்புச் செய்ய வேண்டும் என்பதோடு அந்த வைப்பு ரசீதின் பிரதியை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு RFP ஆவணத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். வைப்பு ரசீதின் பிரதி இல்லாத RFP ஆவணமானது ஒரு செல்லுபடியான ஆவணமாக ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு திரு அக்கில சொய்சா, உதவிப் பணிப்பாளர், தொ.: 071-6855188, மின்னஞ்சல்: akiladishan@edb.gov.lk உடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்**
**திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு (CPCD)**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**
**NDB-EDB கோபுரம், 42, நவம் மாவத்தை, கொழும்பு - 02, இலங்கை**
**தொ.: +94112300700 தொலைநகல்: +94112300715**
**இணையதளம்: www.srilankabusiness.com**